**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண்.213/2013 ல் நி.ம.எண் 51/2022**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.காந்தி என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். கஸ்தூரி** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**<u>ம.சா.1 முதல் விசாரணை</u>**

**02.12.2023**

இந்த மனுவில் நான் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 13.08.2015 தேதியிட்ட அசல் வழக்கு 213/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் ம.சா.ஆ 1 ஆகவும், 13.08.2015 தேதியிட்ட அசல் வழக்கு 213/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் ம.சா.ஆ 2 ஆகவும், 01.09.2019

தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் **17/2016** ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் ம.சா.ஆ **3** ஆகவும், **01.09.2019** தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் **17/2016** ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் ம.சா.ஆ **4** ஆகவும், **21.03.2021** தேதியிட்ட காவல் நிலைய மனு ஏற்பு ரசீது அசல் புகார் நகலுடன் ம.சா.ஆ **5** ஆகவும்,**19.05.2023** தேதியிட்ட காவல் நிலைய மனு ஏற்பு ரசீது அசல் ம.சா.ஆ **6** ஆகவும், குறியீடு செய்கிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.